வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி 18.07.2025 நேரம் மாலை 6.10 மணி

----------------------------------------------------------------------------------

*தலைப்புச் செய்திகள்*

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கச் செய்யும் திட்டங்களில், மத்திய அரசு, 1 லட்சம் கோடி ரூபாய் செலவிடும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

படைப்புத் திறன்சார் தொழில்நுட்பங்களுக்கான, நாட்டின் முதலாவது IICT- உயர்கல்வி நிறுவனம், மும்பையில் உள்ள NFDC வளாகத்தில் திறக்கப் பட்டுள்ளது.

உலகிலேயே 2ஆவது பெரிய சாலைக் கட்டமைப்பு நாடாக, இந்தியா திகழ்வதாக, மத்திய இணையமைச்சர் திரு. ஹர்ஷ் மல்ஹோத்ரா கூறியுள்ளார்.

புதுச்சேரியில், இன்று நடைபெற்ற, சித்தர் இலக்கிய ஆய்வரங்கில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

------------------------

*மோடி பீகார் 1* (18)

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, பீகார் மாநிலம் மோத்திஹாரியில் நடைபெற்ற விழாவில், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். சாலை, ரயில், ஊரக வளர்ச்சி, மீன்வளம், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகள் தொடர்பான, இத்திட்டங்களின் மொத்த மதிப்பு 7 ஆயிரத்து 200 கோடி

ரூபாயாகும். கிழக்கிந்தியாவின் வளர்ச்சிக்கு, பீகாரின் வளர்ச்சி மிக அவசியம் என்று, விழாவில் பேசுகையில் பிரதமர் கூறினார். காங்கிரஸ் கூட்டணி அரசின் பத்தாண்டு கால ஆட்சியில், பீகாருக்கு 2 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு மட்டுமே நிதி கிடைத்த நிலையில், நடப்பு தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, கடந்த பத்தாண்டுகளில், அதை விட அதிக நிதி வழங்கி இருப்பதாகவும், அவர் தெரிவித்தார். நாட்டில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கச் செய்யும் திட்டங்களில், மத்திய அரசு, 1 லட்சம் கோடி ரூபாய் செலவிடும் என்று பிரதமர் தெரிவித்தார். விவசாயிகளின் உற்பத்தி, மற்றும் வருமானத்தை பெருக்க, அரசு உயர் முன்னுரிமை அளிப்பதாகவும், நாட்டின் 100 மாவட்டங்களில், வேளாண் உற்பத்தித் திறனை பெருக்குவதற்கான பிரதமரின் தன்-தானிய கிரிஷி திட்டத்தினால், 1.75 கோடி விவசாயிகள் பயன் பெறுவார்கள் என்றும், அவர் கூறினார். இவ்விழா குறித்து கூடுதல் விவரங்கள்…

(வாய்ஸ்)

*மோடி பீகார்* 2 (9)

(வாய்ஸ்)

பீகார் மாநிலம் மோத்திஹாரியில் நடைபெற்ற விழாவின் போது, பாட்னா – டெல்லி ரயில் உட்பட, 4 அமிர்த பாரத் ரயில்களை, பிரதமர் கொடியசைத்து தொடக்கி வைத்தார். தீனதயாள் அந்த்யோதயா-தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், பீகாரைச் சேர்ந்த சுமார் 61 ஆயிரம் சுய உதவிக் குழுக்களுக்கு, மொத்தம் 400 கோடி ரூபாய் நிதி உதவிகளை அவர் விடுவித்தார். பீகாரில் இன்று பிரதமர் தொடக்கி வைத்த திட்டங்களில், தர்பங்கா-தல்வாரா உட்பட 2 ரயில்ப் பாதை பிரிவுகளை, இரட்டைப் பாதையாக மாற்றும் பணிகளும், சமஷ்டிபூர்-பச்வாரா ரயில் பாதையில், தானியங்கி சிக்னல் வசதிகளை நிறுவும் பணிகளும் அடங்கும்.

------------------------

மோடி-மேற்குவங்கம் (10)

பீகாரை தொடர்ந்து, மேற்குவங்க மாநிலம் துர்காபூரில், இன்று பிற்பகல் நடைபெற்ற விழாவில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். போக்குவரத்து இணைப்பு, எரிவாயு அடிப்படையிலான போக்குவரத்து உள்ளிட்ட துறைகளுக்கான இத்திட்டங்களின் மொத்த மதிப்பு, 5 ஆயிரம் கோடி ரூபாயாகும். எஃகு நகரமான துர்காபூரின் அடையாளம், புதிய திட்டங்களால் இன்னும் வலுப்பெறும் என்று பிரதமர் தமது உரையில் தெரிவித்தார். நாட்டில் கணிசமான எண்ணிக்கையில், வந்தே பாரத் ரயில்கள் இயங்கும் மாநிலங்களில் ஒன்றாக, மேற்குவங்கம் திகழ்வதை அவர் சுட்டிக் காட்டினார்.

------------------------

படைப்புத் திறன் 1 (18)

மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், மஹாராஷ்ட்ர முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்நவிஸ் ஆகியோர், இன்று மும்பையில், இந்தியப் படைப்புத் திறன்சார் தொழில்நுட்பக் கழகத்தை, கூட்டாக திறந்து வைத்தனர். நாட்டின் இந்த முதலாவது, IICT-உயர்கல்வி நிறுவனம், மும்பையில் உள்ள NFDC - தேசிய திரைப்பட மேம்பாட்டுக் கழகத்தின் வளாகத்தில் அமைக்கப் பட்டுள்ளது. படைப்புத் திறன் சார் தொழில் துறையில், இந்திய இளைஞர்களுக்கு, அதிக அதிகாரம் கிடைக்கச் செய்வதே, அரசின் தொலை நோக்குப் பார்வை என்றும், புதிய IICT-உயர்கல்வி நிறுவனத்தால், இளைஞர்களுக்கு பல புதிய வாய்ப்புகள் திறக்கும் என்றும், மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தமது உரையில் கூறினார். புதிய உயர்க் கல்வி நிறுவனத்தில், படைப்புத் திறன் சார்ந்த 17 சிறப்புப் படிப்புகள் இளைஞர்களுக்கு வழங்கப்படும் என்றும், பயிற்சிகளை வழங்க, கூகுள், மெட்டா போன்ற நிறுவனங்களுடன், ஏற்கனவே உடன்பாடு எட்டப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். புதிய படைப்புத் திறன்சார் கழகத்தின் மேம்பாட்டிற்கு, மத்திய அரசு, 400 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து இருப்பதாகவும் அவர் கூறினார். கேளிக்கைத்

துறையில், இந்தியாவின் தலைநகராகத் திகழும் மும்பையில், இப்புதிய உயர்கல்வி நிறுவனம் அமைவது, மிகவும்

*படைப்புத் திறன் 2 (4)*

பொருத்தமானது என்று, மஹாராஷ்ட்ர முதலமைச்சர் திரு. பட்நவிஸ் கூறினார். மத்திய அமைச்சரும், மஹாராஷ்ட்ர முதலமைச்சரும் இணைந்து, மும்பை NFDC வளாகத்தில் உள்ள தேசிய திரைப்பட அருங்காட்சியகத்தில், பாரத் பெவிலியன் அரங்கையும் திறந்து வைத்தனர்.

------------------------

*சாலை (10)*

உலகிலேயே 2ஆவது பெரிய சாலைக் கட்டமைப்புக் கொண்ட நாடாக, இந்தியா திகழ்வதாக, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் இணையமைச்சர் திரு. ஹர்ஷ் மல்ஹோத்ரா கூறியுள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, சாலை மற்றும் நெடுஞ்சாலைகள் மாநாட்டில் உரையாற்றிய அவர், நாட்டில் தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம், 2014ஆம் ஆண்டில், 91 ஆயிரம் கிலோ மீட்டராக மட்டுமே இருந்த நிலையில், இது தற்போது, 1.46 லட்சம் கிலோ மீட்டராக, அதிகரித்து இருப்பதாக தெரிவித்தார். நாட்டில் தற்போது உருவாகி வரும் நவீன சாலைகள், வளர்ச்சி, மற்றும் வாய்ப்புகளுக்கான உயிர் நாடியாகவே திகழ்வதாக, அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

------------------------

*தமிழ்நாடு தினம் (6)*

சென்னை மாநிலம் என்ற பெயரை, தமிழ்நாடு என மாற்ற, கடந்த 1967ஆம் ஆண்டு, அப்போதைய முதலமைச்சர் அண்ணாதுரை, மாநில சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்த நாளான ஜூலை 18ஆம் தேதி, இன்று தமிழ்நாடு தினமாக கொண்டாடப் படுகிறது. இந்நாளை ஒட்டி, தமிழக முதலமைச்சர் திரு. முக. ஸ்டாலின், துணை முதலமைச்சர் திரு. உதயநதி ஸ்டாலின் ஆகியோர், மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

------------------------

*சித்தர் இலக்கியம் (14)*

புதுச்சேரியில், கலை-பண்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் தமிழ் வளர்ச்சி சிறகம், இன்று காமராஜர் மணிமண்டபத்தில், சித்தர்கள் இலக்கிய மாநாட்டு ஆய்வரங்கை நடத்தியது. குடிமைப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. திருமுருகன் தலைமையில் நடைபெற்ற தொடக்க விழாவில், சட்டப் பேரவைத் தலைவர் திரு.ஆர். செல்வம், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, சித்தர்கள் பற்றிய ஆய்வுக் கோவையை வெளியிட்டார். முதலமைச்சர் திரு. ரங்கசாமி, பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், அமைச்சர் திரு. ஜான்குமார், தமிழ் அறிஞர் திரு.ஆதிகேசவன் ஆகியோர், அதை பெற்றுக் கொண்டனர். புதுச்சேரி, சித்தர்கள் வாழ்ந்த ஆன்மீக பூமி என்று, முதலமைச்சர் திரு. ரங்கசாமி விழாவில் பேசுகையில் கூறினார். சித்தர்கள் இருக்கும் பகுதி, பெரிய அளவில் வளர்ச்சி பெறும் என்றும், சிறிய மாநிலமான புதுச்சேரியில், தனிநபர் வருமானம் அதிகமாக உள்ளதற்கு, சித்தர்களின் ஆசியே காரணம் என்றும் அவர் குறிப்பிட்டார். முதலமைச்சர் மேலும் கூறுகையில்....

(வாய்ஸ்-ரங்கசாமி)

------------------------

*ரங்கசாமி வீட்டு வசதி (8)*

பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ், புதுச்சேரியில் இந்திரா நகர் தொகுதியைச் சேர்ந்த பயனாளி ஒருவருக்கு, 2ஆம் தவணை உதவியாகவும், 12 பேருக்கு, 3ஆம் தவணை உதவியாகவும், மொத்தம் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை, இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி வழங்கினார். சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், அரசுக் கொறடா திரு. ஏ.கே.டி ஆறுமுகம், குடிசை

மாற்று வாரிய தலைமை செயல் அதிகாரி திரு. ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

------------------------

பல்கலைக்கழகம் (13)

புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத் துறையில், ஆகம ஆய்வுகள், மற்றும், இந்திய அறிவு முறைகளுக்கான மையம், பாறை ஓவியம் மற்றும் அறிதிறன் ஆய்வுகளுக்கான மையம் ஆகிய 2 ஆராய்ச்சி மையங்கள், புதிதாக அமைக்கப் பட்டுள்ளன. இவ்விரு மையங்களிலும், ஓராண்டு முதுகலை பட்டயப் படிப்புகள் வழங்கப்படும் என துணைவேந்தர் பேராசிரியர் பிரகாஷ் பாபு அறிவித்துள்ளார். தென்னிந்தியாவில் இன்றுவரை துடிப்பாக நீடிக்கும் கோவில் கலாச்சாரம், கோவிலைக் கட்டியவர்களின் பொறியியல் திறன், மற்றும் நில அமைப்பியல் அறிவுக்கு சான்று என்றும், வரலாற்றுக்கு முந்தைய காலத்தில், மனிதர்கள் வாழ்ந்த விதம் பற்றிய விவரங்களை, பாறை ஓவியங்கள் மூலம் தெரிந்து கொள்ள முடியும் என்றும் அவர் கூறியுள்ளார். இத்துறைகள் சார்ந்த புதிய படிப்புகளால், சுற்றுச் சூழல் சுற்றுலா, சாகச சுற்றுலா போன்ற துறைகளில், இளைஞர்கள் வேலை வாய்ப்புப் பெற ஏதுவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

------------------------

படகு (11)

இந்தியக் கடற்படையினரின் ஆழ்கடல் மீட்புப் பணிகளுக்கு உதவும் வகையில், முற்றிலும் உள்நாட்டிலேயே வடிவமைத்து தயாரிக்கப் பட்டுள்ள, 2 நிஸ்தார் – நீச்சல் ஆதரவுப் படகுகள், இன்று, முறைப்படி கடற்படையிர் சேர்த்து வைக்கப்பட்டன. இதுதொடர்பாக விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பாதுகாப்புத் துறை இணையமைச்சர் திரு. சஞ்சய் சேத், கடற்படைத் தலைவர் அட்மிரல் தினேஷ் திரிபாதி உட்பட பலர் கலந்து கொண்டனர். 120 சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் பங்கேற்புடன், உள்நாட்டிலேயே

தயாரிக்கப் பட்டுள்ள இப்படகுகள், சுயசார்பை நோக்கிய இந்தியாவின் பயணத்தில், முக்கிய மைல் கல்லாகவும், சர்வதேச தரத்துடன் கப்பல் கட்டும் பணிகளில், இந்தியாவின் திறமைக்கான சான்றாகவும், திகழ்கின்றன.

------------------------

*வானிலை* (13)

மேற்கு திசைக் காற்றின் வேகமாறுபாடு, மற்றும் வளிமண்டல சுழற்சி காரணமாக, வரும் 24ஆம் தேதி வரை, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல், மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம், தேனி, தென்காசி, திண்டுக்கல், திருவள்ளூர், ராணிப்பேட்டை, மற்றும், காஞ்சிபுரம் மாவட்டங்களில் கனமழைக்கும், கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், மற்றும் நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில், மிக கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. சூறாவளிக் காற்று வீசுவதற்கு வாய்ப்பு அதிகம் உள்ள, தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, செங்கல்பட்டு மதுராந்தகத்தில், 9 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

------------------------

*சதுரங்கம்* (6)

லாஸ் வேகாஸ்-சில் நடைபெறும் Free style கிராண்ஸ்லாம் சதுரங்கப் போட்டிகளில், இந்திய கிராண்ட் மாஸ்டர் அர்ஜுன் எரிகாசி, அரையிறுதி நிலைக்கு தகுதி பெற்றுள்ளார். இதன்மூலம், இப்போட்டிகளில் அரையிறுதி நிலைக்கு முன்னேறும் முதலாவது இந்திய வீரராக அவர் சாதனை படைத்துள்ளார். நாளை நடைபெற உள்ள அரையிறுதிப் போட்டியில், கிராண்ட் மாஸ்டர் லெவோன் ஆரோனியனை, எரிகாசி சந்திக்கிறார்.

------------------------

நாடுகளை ஒன்றுபடுத்துவதற்கான, இந்தியாவின் சர்வதேச இயக்கம் குறித்த மாநாட்டை, இன்று டெல்லி அருகே நொய்டாவில், மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தொடக்கி வைத்தார். 2047ஆம் ஆண்டிற்குள், முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் முயற்சிகளில், அமிர்த காலத்திற்கான பிரதமர் திரு. நரேந்திர மோடியின் பஞ்ச பிராண் உறுதிப்பாட்டிற்கு ஏற்ப, இளைஞர்கள் முக்கிய பங்களிக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார். இந்தியா தற்போது, முக்கிய சீர்திருத்தங்களின் விளிம்பில் நிற்பதாக, அமைச்சர் கூறினார். நாட்டை கட்டி எழுப்பும் பணிகளை, இளைஞர்கள் தங்களின் கடமையாகவும், உரிமையாகவும் எடுத்துக் கொண்டு, மிகுந்த அர்ப்பணிப்பு உணர்வுடன், அதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கச் செய்யும் திட்டங்களில், மத்திய அரசு, 1 லட்சம் கோடி ரூபாய் செலவிடும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

படைப்புத் திறன்சார் தொழில்நுட்பங்களுக்கான, நாட்டின் முதலாவது IICT- உயர்கல்வி நிறுவனம், மும்பையில் உள்ள NFDC வளாகத்தில் திறக்கப் பட்டுள்ளது.

உலகிலேயே 2ஆவது பெரிய சாலைக் கட்டமைப்பு நாடாக, இந்தியா திகழ்வதாக, மத்திய இணையமைச்சர் திரு. ஹர்ஷ் மல்ஹோத்ரா கூறியுள்ளார்.

புதுச்சேரியில், இன்று நடைபெற்ற, சித்தர் இலக்கிய ஆய்வரங்கில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.